# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092378

1. District : மாவட்டம் நாமக்கல் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு நாமக்கல் Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 11/AC/2019 Date: நாள் 05-08-2019

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988 as amended Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: by the Prevention of corruption Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 1) 06-07-2019 முதல் 01-08-2019 வரை பலமுறை செல்போன் மூலமாக
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05-08-2019 12.30 மணிக்கு Time : நேரம் 2) 03-08-2019-ம் தேதி மாலை சுமார் 7 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-III 05-08-2019 Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்-மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 1) சுமார் 3 கி.மீ மேற்கு நில
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு, மாவட்ட காவல் அலுவலகம், நாமக்கல் மாவட்டம். 2) சுமார் 30 கி.மீ வட மேற்கு நல்லாம்பாளையம் கன்னியம்மன் கோவில் அருகில்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. K. ஜெய்சங்கர் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கந்தசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 50 வயது (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் டிரைவர் (g) Address : முகவரி க.எண். 7/90-5 கிணத்துராம் நகர், கொன்னையார்-Po, திருச்செங்கோடு-Tk, நாமக்கல்-Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. ராஜேந்திரன், காவல் உதவி ஆய்வாளர், நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு, மாவட்ட காவல் அலுவலகம். நாமக்கல் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / காவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / காவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால். —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணித் தருப்பப் படுகிறது

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டின் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்பட்டுள்ள ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் பகர்ப்பு ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுத்தவரின் கையொப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

ஜெயசங்கரி
5/8/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் கையொப்பம்

05/08/19

Name: பெயர் A. J. ஜெயகுமார்
Rank: நிலை ........................No. எண் ..........
காவல் துணை கண்காணிப்பாளர்,
இ.ரு.க. பிரிவு, நாமக்கல்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

05-08-2019 மாலை 16.15 மணி

F. Sebbathenon 5/8/19

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/AC/2019 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 05.08.2019-ஆம் தேதி திங்கட்கிழமை பகல் 12.30 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, கொன்னையார் அஞ்சல், கணேஷ்ராம் நகரில் வசிக்கும் கந்தசாமி என்பவரின் மகன் திரு.K.ஜெய்சங்கர் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி எழுத்து மூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் கே.ஜெய்சங்கர், த/பெ கந்தசாமி, 7/90-5, கணேஷ்ராம் நகர், கொன்னையார் அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். பெறுதல் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை, நாமக்கல் மாவட்டம். அய்யா,நான் தமிழ்நாடு மின்வாரியத்தில் கம்பியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது சொந்த கிராமம் வண்டிநத்தம். கடந்த 2009 ஆம் வருடம் திருச்செங்கோடு அகரம் கிராமத்தை சேர்ந்த சித்ரா என்பவர் தனது உறவினர் டெல்லியை சேர்ந்த ராஜு என்பவருக்கு சொந்தமான நிலத்தை விற்க தனக்கு பவர் கொடுத்துள்ளதாக அந்த நிலத்தை வாங்கிக்க சொல்லி என்னிடம் கேட்டார். அந்த நிலத்திற்கு சித்ராவை டெல்லியை சேர்ந்த அவரது உறவினர்கள் ராஜு மற்றும் சின்னதம்பி என்கிற முருகேசன் ஆகியோர்கள் மல்லசமுத்திரம் சப்-ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆவண எண்.7/2009-ன்படி பவர் ஏஜன்டாக நியமித்திருந்தனர். நானும் சரி சொந்த ஊரில் உள்ள நிலம் என்பதால் ஆடு மாடு மேய்க்க உதவியாக இருக்கும் என்று வாங்கிக்கொள்வதாக கூறி ரூ.97,000/-க்கு விலை பேசினேன். அதன்படி கடந்த 9.1.2009-ம் தேதி அந்த நிலத்தை மல்லசமுத்திரம் சப்-ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆவண எண்.39/2009-ன்படி கிரையம் பெற்றேன். பின் என் குடும்ப சூழ்நிலை காரணமாக அந்த நிலத்தை திருச்செங்கோடு ராமபுரத்தை சேர்ந்த வி.பி.பச்சிராஜா என்பவருக்கு அதே விலைக்கு 3.4.2010 அன்று ஆவண எண்.154/2010 படி விற்றுவிட்டேன். பின் கடந்த 2011-ஆம் வருடத்தில் மேற்படி டெல்லியை சேர்ந்த சின்னதம்பி (எ) முருகேசன் என்பவர் அவரது அண்ணன் ராஜு, பவர் ஏஜன்ட் சித்ரா, என்னிடம் இருந்து நிலம் பெற்ற பச்சிராஜா மற்றும் என்மீதும் திருச்செங்கோடு நீதிமன்றத்தில் O.S.No.67/2011-

ன்படி ஒரு வழக்கு தொடர்ந்தார். அதன் பின்புதான் ராஜு என்பவர் அவரது குடும்ப சொத்தை அவரது தம்பி சின்னதம்பி (எ) முருகேசனுக்கு தெரியாமல் விற்று விட்டது தெரியவந்தது. நான் ராஜுவை தொடர்பு கொண்டு கேட்டபோது அது தனது குடும்ப பிரச்சனை என்று கூறிவிட்டார். அவர் டெல்லியில் இருந்ததால் அவரை நேரில் பார்க்க முடியவில்லை. இதற்கு இடையில் ராஜுவும் என்னிடமிருந்து நிலம் பெற்ற பச்சிராஜாவும் உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டனர். பின் கடந்த 6.6.2017-இல் திருச்செங்கோடு நீதிமன்றத்தில் O.S.No.67/2011-வழக்கில் திரு.சின்னதம்பி ஆஜராகவில்லை என்று அந்த வழக்கை தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பின் கடந்த 6.7.2019-ம் தேதி நாமக்கல் மாவட்ட நில அபகரிப்பு பிரிவில் இருந்து எஸ்.ஐ. ராஜேந்திரன் என்பவர் எனக்கு போன் செய்து நான் நிலம் வாங்கியது சம்பந்தமாக சின்னதம்பி என்பவர் புகார் கொடுத்துள்ளதாகவும் சித்ரா எனபவர் விசாரணைக்கு வந்துள்ளதாகவும் நானும் விசாரணைக்கு நாமக்கல் எஸ்.பி. ஆபீசில் உள்ள நிலஅபகரிப்பு பிரிவிற்கு வரவேண்டும் என்று சொன்னார். நான் வேலையாக இருந்ததால் அன்றைய தினம் வர இயலாது என்று தெரிவித்தேன். பின் அன்றைய தினமே எஸ்.ஐ. ராஜேந்திரன் மீண்டும் எனக்கு போன் செய்து, உங்க மேல கேஸ் போட வேண்டியிருக்கும், உன் வேலை போய்டும் நான் கேக்கிற பணத்தை கொடுத்தீனா உனக்கு எந்த பிரச்சனையும் இல்லாம நான் பாத்துக்கிறேன் என்று சொன்னார். மேலும் என்னை விசாரணைக்கு நேரில் வரச்சொன்னார். வரும்போது ரூ.15,000/- கொண்டு வரச் சொன்னார். அதன்படி நானும் இரண்டு நாட்கள் கழித்து லீவு போட்டுவிட்டு நாமக்கல் நிலஅபகரிப்பு பிரிவு அலுவலகத்திற்கு விசாரணைக்கு சென்றேன். எங்களை எஸ்.ஐ. ராஜேந்திரன் விசாரித்து பதிவு செய்த பத்திரத்தை கேன்சல் செய்து கொடுத்திடுங்க என்று சொல்லி என்னிடமும் சித்ராவிடமும் பேப்பரில் எழுதி கையெழுத்து பெற்றார். அன்றைய தினம் சின்னதம்பி (எ) முருகேசன் எழுதி கொடுக்கவில்லை. பின் எஸ்.ஐ. ராஜேந்திரன் எனக்கு பலமுறை போன் செய்து கேட்ட பணத்தை கொடுக்காம நீ கையெழுத்து போட்டிட்டு போய்ட்ட. இன்னும் விசாரணை முடியல கேட்ட பணத்தை கொண்டுவந்து கொடுத்திட்டு போ, இல்லைன்னா உன் வேலையை காலி பண்ணிடுவேன் என்று மிரட்டிவந்தார். நான் 1-ம் தேதி சம்பளம் வந்த உடனே கொடுத்திடறேன் என்று சொல்லி வந்தேன். என்னிடம் பணம் கேட்பது போலவே சித்ராவிடமும் அவர் மீது கேஸ் போடாமல் இருக்க எஸ்.ஐ. ராஜேந்திரன் பணம் கேட்டு தொந்தரவு செய்வதாக என்னிடம் சித்ராவும் அவருடைய தங்கச்சி சுசீலாவும் சொன்னார்கள். சித்ராவிற்கு நிலத்தை எழுதி பவர் கொடுத்த ராஜு

இறந்து விட்டார். அவர்தான் அவரது தம்பி சின்னதம்பிக்கு தெரியாமல் நிலத்தை விற்றவர். மேலும் என்னிடம் நிலம் வாங்கிய பச்சிராஜாவும் இறந்துவிட்ட நிலையில் நாங்கள் பத்திரத்தை கேன்சல் செய்வதற்கு சாத்தியம் இல்லை என்று சப்-ரெஜிஸ்ட்ரார் ஆபீசில் நான் போய் விசாரித்த போது சொன்னார்கள். கடந்த 1.08.2019-ம் தேதி மாலை எனக்கு போன் செய்து பேசிய எஸ்.ஐ. ராஜேந்திரன் ஏன் இன்னும் கேட்ட பணத்தை கொண்டுவந்து கொடுக்கல உனக்காகத்தான் காத்திட்டிருக்கிறேன் என்று சொன்னார். நான் இன்னும் வேலை முடியல சார் என்று சொன்னேன். வேலையை முடிச்சிட்டு பணத்தை கொண்டு வா என்று சொன்னார். என்னால் அவர் சொன்னதுபோல் அவரை போய் பார்க்க முடியவில்லை. அதனால் மீண்டும் சிறிது நேரம் கழித்து எனக்கு போன் செய்து ஏன் வரவில்லை என்று கேட்டார். நான் வேலை முடியவில்லை அடுத்த நாள் 02.08.2019-ம் தேதி வருவதாக சொன்னேன். அவர் தான் சென்னை High Court செல்வதாகவும் 03.08.2019-ம் தேதி சனிக்கிழமை வந்து கொடு என்று சொன்னார். பின் சனிக்கிழமை 03.08.2019-ம் தேதி மாலை சுமார் 7 மணிக்கு எஸ்.ஐ. ராஜேந்திரன் எனக்கு போன் செய்து எங்கள் வீட்டில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நல்லாம்பாளையம் பெட்ரோல் பங்க் தாண்டி காளியம்மன் கோவில் அருகில் பணத்தை கொண்டு வரும்படி சொன்னார். நானும் எனது வண்டியில் போய் அவரை பார்த்தேன். அவர் அவருடைய காரில் அங்கு வந்திருந்தார். அப்போது என்னிடம் பணம் கேட்டார். நான் என்னிடம் பணம் ரூ.2,000/- மட்டும்தான் இருக்கிறது என்று சொன்னேன். அதை இப்பவே கொடு என்று கட்டாயபடுத்தி வாங்கிக்கொண்டார். பின் மீதி பணத்தை எடுத்துக்கொண்டு திங்கள்கிழமை 05.08.2019-ம் தேதி மாலைக்குள் வந்துவிடு இல்லைன்னா உன் மேல கேஸ் போட்டு அரெஸ்ட் பண்ணிடுவேன் என்று மிரட்டலாக சொன்னார். நான் சப்-ரெஜிஸ்ட்ரார் ஆபீசில் விசாரித்த விபரத்தை சொன்னேன். அதற்கு அவர் நீ சித்ராவிடம் வாங்கிய பத்திரத்தை மட்டும் கேன்சல் பண்ணிடு மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னார். நான் அப்படி பண்ணமுடியாது என்று சொல்கிறார்கள் என்று சொன்னேன். அவர் நீ பணத்தை எடுத்திட்டு வா நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னார். நான் எவ்வளவு சார் என்று கேட்டேன். இப்போதைக்கு ரூ.10,000/- கொண்டுகிட்டு வா, பத்திரத்தை கேன்சல் பண்ண முடியலைனா, மறுபடியும் என்ன பன்றதுன்னு சொல்றேன் என்று சொன்னார். மேலும் உனக்கு நிறைய தரம் நான் போன் பண்ணிட்டேன், இனிமே நான் உனக்கு போன் செய்யமாட்டேன், நீயே பணத்தை ரெடிபண்ணிட்டு ஆபீஸ்கிட்ட வந்து

எனக்கு போன் பண்ணு என்று சொன்னார். நாமக்கல் நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் என் மீது வழக்கு பதிவு செய்யாமல் இருக்க எஸ்.ஐ. ராஜேந்திரன் அவர்களுக்கு பணம் ரூ.10,000/-ஐ லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லை. அவர் கேட்ட பணத்துடன் அவரை இன்று நேரில் சந்திக்க உள்ளேன். அவர்மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/-xxxxக.ஜெய்சங்கர்) 5/8/19.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, படித்துப்பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 05.08.2019-ஆம் தேதி மாலை 15.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.11/AC/2019, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

05/08/19

(A.T. ஜெய்குமார்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.